மதுரை வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர், கழக கலை – இலக்கிய பகுத்தறிவுப் பேரவை

மாநில துணைச் செயலாளர் வீரகணேசன் மறைவு!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 10 -

மதுரை வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளரும் கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளருமான வீர கணேசன் (வயது 66) அவர்கள் 07.10.2025 அன்று காலை 11.30 மணியளவில் உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

"வீரகணேசன் அவர்கள் உடல் நலக் குறைவால் மறைவுற்றார் என்ற செய்தியறிந்ததும் மிகுந்த துயருற்றேன்.

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகவும், தொடர்ந்து ஒன்றுபட்ட மதுரை மாவட்ட இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளராகவும் பின்னர் மதுரை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகவும் திறம்பட பணியாற்றியவர்.

மதுரை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தபோது அழகர்கோவிலில் நடைபெற்ற இளைஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டத்தை சிறப்பாக நடத்தி என்னுடைய பாராட்டைப் பெற்றார்.

மாவட்டத்தில் இளைஞர் அணி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். கிராமம் கிராமமாகச் சென்று கழக இளைஞர் அணி அமைப்பை உருவாக்க பாடுபட்டவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது அளவற்ற அன்பு கொண்டவராகத் திகழ்ந்த வீரகணேசன் அவர்கள் என் மீது தீராப் பற்று கொண்டவர்.

நான் மதுரைக்கு வரும் போதெல்லாம் ஓடோடி வந்து வரவேற்ற காட்சிகள் இன்றும் என் மனக் கண்ணில் நிழலாடுகின்றன.

கழகத்தின் மீது மிகுந்த பற்றுகொண்டு கழகப் பணியை செவ்வனே செய்துவந்த வீரகணேசன் அவர்கள் உடல் நலம் குன்றி மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

வீரகணேசன் அவர்களை இழந்து வாடும் அன்னாரது குடும்பத்தாருக்கும், மதுரை மாவட்டக் கழகத்தினருக்கும் எனது ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்

ரூ.21.98 கோடியில் - பூம்புகாரில் வளர்ச்சிப் பணிகள்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, அக். 10 -

தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில் ரூபாய் 21.98 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் விரைவில் முடிந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று முன்தினம் (08.10.2025) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்களின் தலைமையில், மாவட்ட வாரியாக சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள சுற்றுலா வளாகத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இரா. இரோஜேந்திரன் தெரிவித்ததாவது: முதலமைச்சர் அவர்களின் நல் வழிகாட்டுதலின்படி, சுற்றுலாத்துறையில் மாவட்ட வாரியாக பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் தமிநாட்டின் பண்பாடு, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கிய துறைமுகம் நகரமான பூம்புகாரில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் ரூபாய் 21.98 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

இதில் நுழைவு கட்டண அறை, தகவல் மையம், வாகனம் நிறுத்தும் இடம், சுற்றுச்சுவர் அமைத்தல், பொருட்கள் வைக்கும் அறை, நடைபாதை, கழிப்பறை, போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பாரம்பரிய மின் விளக்குகள் ஏற்பாடு மற்றும் கட்டிடக் கலை உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பணிகள் அனைத்தும் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வரப்படும்.

சுற்றுலாத்துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் நம் பாரம்பரிய மிக்க தொன்மை வாய்ந்த பிரசித்திபெற்ற கோவில்கள், புராதான சின்னங்கள் மற்றும் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி வால்பாறை போன்ற இயற்கையாக அமையப்பெற்ற மலைவாச சுற்றுலாத் தலங்கள். தமிழ்நாட்டின் மாவட்ட வாரியாக சுற்றுலா தலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் குறித்தும் மாவட்டந்தோறும் வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலா தலங்களில் போக்குவரத்து முதற்கொண்டு, விருந்தோம்பல் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படுத்திதர வேண்டும் இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி.ச.கவிதா கண்காணிப்பு பொறி யாளர், திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மேற்கு மாவட்டம்

திருச்செங்கோடு நகர இளைஞரணி சார்பில் பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜோயல், ஆர்.டி.மதன், ஆர்.நடேசன் பங்கேற்பு!

நாமக்கல், அக். 10 -

நாமக்கல் மேற்கு இளைஞர் அணி சார்பில் பயிற்சி பாசறைக் கூட்டம் திருச்செங்கோடு மேற்கு நகர பொறுப்பாளரும் முன்னாள் நகர மன்ற தலைவருமான ஆர்.நடேசன் தலைமையில் நடைபெற்றது.

நகர இளைஞர் அணி அமைப்பாளர் கு.செங்கோட்டுவேல் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜோயல், சென்னை வட கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன் ஆகியோர் கலந்து கொண்டு வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை வீடு வீடாகச் சென்று திண்ணைப் பிரச்சாரம் குறித்தும், நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதிகளில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் இணைந்து செயல்பட வேண்டும் என்பதை குறித்தும் விளக்கம் அளித்து பேசினர்.

கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மல்லை ஜெகதீசன், நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள், கார்த்தி, பாலாஜி, வார்டு அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஒன்றியம், சுக்கம்பாளையத்தில் சிறிய அளவிலான ஜவுளி பூங்கா திட்டத்தின் கீழ் கார்த்திகேயா வீவிங் பார்க் ஜவுளி பூங்காவினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டனர். இதில் அரசு செயலாளர் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை) வி.அமுதவல்லி, இயக்குநர் (துணிநூல் துறை) இரா.லலிதா, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, மண்டல துணை இயக்குநர் (துணிநூல் துறை) செ.தமிழ்ச்செல்வி உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (08.10.2025) மாவட்ட வாரியாக மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுலா திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள சுற்றுலா வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச.கவிதா, கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதுவரை ரூ.6 கோடியே 33 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 33 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 08-10-2025** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

நிதி உதவி பெறுவோர் விவரம்

1.	பி.ராமசாமி, எ.பாதர்பேட்டை அஞ்சல், துறையூர் தாலுக்கா, திருச்சி	25,000/––
2.	வி.பிரபு, லட்சுமிபுரம், கத்தாயம்பட்டு அஞ்சல், வேலூர் – 632 312	25,000/–
3.	எஸ்.வேதரெத்தினம், மடப்புரம், தீவம்பாள்புரம் அஞ்சல், திருவாரூர் மாவட்டம்	25,000/–
4.	பி. பெருமாள், மேலப்பொன்னகரம் 5வது தெரு, கரிமேடு, மதுரை	25,000/–
5.	எஸ்.எம்.பரமசிவம், காந்தி நகர், ஜக்கமநாயக்கன்பட்டி, போடி, தேனி மாவட்டம்	25,000/–
6.	வி.சுப்பிரமணி, 10வது வார்டு, ஆதிதிராவிடர் குடியிருப்பு, பாலசமுத்திரம்	25,000/–
7.	பி.ஆண்டி, வட்டான்வலசை, செம்பிடையார்குளம், மண்டபம், இராமநாதபுரம்	25,000/–
8.	அ.செல்வம், நேருஜி தெரு, சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.	25,000/–
	மொத்தம்	**ரூ.2,00,000/-**

நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் ஒன்றியம், எழந்தகுட்டை கிராமம், ஈக்காட்டுர் பகுதியில் அமைந்துள்ள ஆர்.என் மஹாலில் வீட்டு மனை பட்டா வழங்கும் விழா அமைச்சர் மரு. மதிவேந்தன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் நேற்று முன்தினம் (08.10.2025) துவங்கி வைத்தனர். உடன் நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி, நாமக்கல் மாவட்ட ஆட்சி தலைவர் திருமதி. துர்காதேவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.